## சுருக்கம்

நில எடுப்பு – சென்னை மாவட்டம் – மாம்பலம்–கிண்டி வட்டம் – கோடம்பாக்கம் கிராமம் – பிளாக் எண்.93 – புல எண்.62/8 ல் 31 மனைகள் மற்றும் 2005 சதுர அடி தனியார் நிலங்களை சைதாப்பேட்டை சென்னை மாநகராட்சி விளையாட்டு திடல் மற்றும் பள்ளி விரிவாக்கப் பணிக்காக சுமார் ரூ.11.50 கோடி செலவில் தமிழ்நாடு நில எடுப்பு சட்டத்தின் கீழ் கையகப்படுத்த அரசின் நிர்வாக ஒப்பளிப்பு அளித்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

### நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந1) துறை

அரசாணை (நிலை) எண்.17, நாள்: 25.01.2010

தை – 12,
திருவள்ளுவர் ஆண்டு – 2041,

படிக்க:

1. அரசு ஆணை (நிலை) எண்.809, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி நிர்வாகத் துறை, நாள் 17.05.1979
2. அரசு ஆணை (நிலை) எண்.881, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி நிர்வாகத் துறை, நாள் 16.06.1982
3. அரசு ஆணை (நிலை) எண்.167, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 13.07.1992

படிக்கவும்:

4. சென்னை, முதன்மைச் செயலாளர் மற்றும் நில நிர்வாக ஆணையர் கடித எண்.எம்2/17609/2009, நாள் 20.10.2009

* * * * *

**ஆணை:–**

மேலே பார்வை ஒன்று மற்றும் இரண்டில் படிக்கப்பட்ட அரசாணைகளில் ஏற்கெனவே சென்னை மாநகராட்சிக்குட்பட்ட சைதாப்பேட்டை, சென்னை மாநகராட்சி பள்ளிக்கு விளையாட்டு திடல் மற்றும் பள்ளி விரிவாக்கம் பணிக்காக 31 மனைகள் நில எடுப்பு சட்டத்தின் கீழ் கையகப்படுத்த தமிழ்நாடு நில எடுப்புச் சட்டம், 1894, பிரிவு 4 (1) ன் கீழ் அறிவிக்கையும் பிரிவு 6 ன் கீழ் விளம்பல் அறிவிக்கையும் வெளியிடப்பட்டது. மேற்படி நில எடுப்பிற்கு எதிராக நில உரிமையாளர்கள் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்ததில் நில எடுப்பு நடவடிக்கையை உயர்நீதிமன்றம் 16.07.1991 அன்று பிரிவு 6 ன் கீழான விளம்பல்

அறிவிக்கையை ரத்து செய்தது. அதன் பிறகு மேலே மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் பிரிவு 6 ன் கீழ் புதிதாக 32 மனை நிலத்தினை நில எடுப்பு செய்ய அறிவிக்கை வெளியிடப்பட்டது. மேற்படி நில எடுப்பினை எதிர்த்து நில உரிமையாளர்கள் மீண்டும் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்ததில் உயர்நீதிமன்றம் 16.02.1995 ல் தள்ளுபடி செய்தது. அதை தொடர்ந்து மேல்முறையீடும் 12.03.1996 ல் உயர்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது. பின்னர் உச்சநீதிமன்றத்தில் நில உரிமையாளர்கள் சிறப்பு அனுமதி மனு செய்ததில், உச்சநீதிமன்றம் பார்வை மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் வெளியிடப்பட்ட நில எடுப்பு சட்டம் பிரிவு 6 ன் கீழ் வெளியிட்ட விளம்பல் அறிவிக்கையை ரத்து செய்து உத்தரவிட்டது. உச்சநீதிமன்றத்தின் ஆணையை மறுபரிசீலினை செய்ய கோரிய அரசின் மனுவினையும் உச்சநீதிமன்றம் 03.10.2007 ல் தள்ளுபடி செய்தது.

2. இந்நிலையில் மேலே நான்கில் படிக்கப்பட்ட சென்னை, முதன்மைச் செயலாளர் மற்றும் நில நிர்வாக ஆணையரின் கடிதத்தில் தற்சமயம் மீண்டும் சென்னை மாவட்டம், சைதாப்பேட்டை சென்னை மாநகராட்சி பள்ளி விளையாட்டு திடல் மற்றும் பள்ளி விரிவாக்கப் பணிக்காக, 31 மனைகள் மற்றும் 2005 சதுர அடி நிலத்தை சுமார் ரூ11.50 கோடி செலவில் நில எடுப்பு சட்டத்தின் கீழ் கையகப்படுத்த அரசின் நிர்வாக ஒப்புதல் வழங்குவதற்கும் பிரிவு 4 (1) ன் கீழ் அறிவிக்கை வெளியிடவும் அரசின் ஆணை வேண்டி கருத்துரு அனுப்பியுள்ளார்.

3. மேற்படி நில எடுப்பு சட்டத்தின் கீழ் கையகப்படுத்த உத்தேசிக்கப்பட்ட நிலத்தினை சென்னை மாவட்ட வருவாய் அலுவலர் 22.07.2009 அன்று புலத்தணிக்கை செய்துள்ளார் என்றும், மேற்படி நிலம் ரயத்துவாரி நிலம் என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் இதில் மரங்கள் கட்டிடங்கள் வழிபாட்டுத் தலங்கள் ஏதும் இல்லை என்றும் இதன் மேற்குப்பகுதியில் ஒரே ஒரு சிதிலடைந்த சுற்றுச்சுவர் மட்டும் உள்ளது என்றும் இந்நிலமானது நகர்புற நில உச்சவரம்புச் சட்டத்தினால் கவரப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார். மேற்படி நிலத்தின் மதிப்பானது கோடம்பாக்கம் சாலையின் வழிகாட்டி மதிப்பின்படி சதுர அடி ரூ.1500/– என மதிப்பிடப்பட்டுள்ளதாக சென்னை மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளதாக தெரிவித்து அதன்படி 31 மனைகள் 2005 சதுர அடி தோராயமாக ரூ.11,46,07,500/– என்றும் 30% ஆறுதல் தொகை மற்றும் 12% கூடுதல் சந்தை மதிப்பு கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் மதிப்பிடப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார் எனவும், மேற்படி சென்னை மாவட்ட ஆட்சியரால் மதிப்பிடப்பட்ட நில மதிப்பு தோராயமானது என்றும் அது ஏற்றுக் கொள்ளப் கூடிய தோராய மதிப்பு என்றும், மேற்படி நிலத்தின் மதிப்பினை முன் நில மதிப்பீடு கருத்துரு ஆய்வு செய்யும் சமயத்தில் விரிவாக ஆராயப்படும் என்றும் தெரிவித்துள்ளார். மேற்படி நிலத்தினை நில ஆர்ஜிதம் செய்வதற்கு சென்னை மாநகராட்சி தனது தீர்மானம் எண்.665/2007, நாள் 29.12.2007 ல் ஒப்புதல் அளித்துள்ளது என்றும் சென்னை மாவட்டம், கிண்டி–மாம்பலம் வட்டம், கோடம்பாக்கம் கிராமம், சைதாப்பேட்டை சென்னை மாநகராட்சி பள்ளி விளையாட்டு திடல் மற்றும் விரிவாக்கப் பணிக்காக புல எண்.62/8 ல் 31 மனைகள் மற்றும் 2005 சதுர அடி நிலத்தினை கையகப்படுத்த நிர்வாக அனுமதி அளிக்குமாறு அரசினைக் கோரியுள்ளார்.

4. மேற்கண்ட சூழ்நிலையில், சென்னை, முதன்மைச் செயலாளர் மற்றும் நில நிர்வாக ஆணையர் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து சென்னை மாநகராட்சிக்குட்பட்ட சைதாப்பேட்டை, சென்னை மாநகராட்சி பள்ளி விளையாட்டு திடல் மற்றும் பள்ளி விரிவாக்கப் பணிக்காக சென்னை மாவட்டம், கிண்டி–மாம்பலம் வட்டம், கோடம்பாக்கம் கிராமம், புல எண்.62/8 ல் 31 மனைகள் மற்றும் 2005 சதுர அடி தனியார் நிலங்களை தமிழ்நாடு நில எடுப்புச் சட்டம் 1894 ன் கீழ் சுமார் ரூ.11.50 கோடி ஆகும் செலவை சென்னை மாநகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையுடன் நில எடுப்பு செய்ய நிர்வாக ஒப்பளிப்பு வழங்கி ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

நிரஞ்சன் மார்டி,
அரசு செயலாளர்.

பெறுநர்:
முதன்மைச் செயலாளர் மற்றும் நில நிர்வாக ஆணையர், சென்னை – 5
மாவட்ட ஆட்சியர், சென்னை மாவட்டம், சென்னை – 1
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை – 3

நகல்:
மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர், சென்னை – 9
மாண்புமிகு துணை முதலமைச்சரின் செயலாளர், சென்னை – 9
தலைமைச் செயலாளரின் தனிச் செயலர், சென்னை – 9
வருவாய் (நி.மு.4/நி.நி.2) துறை, சென்னை – 9
நிதி (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை) துறை, சென்னை – 9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு செயலாளரின் தனி செயலர், சென்னை – 9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந2) துறை, சென்னை – 9
இருப்பு கோப்பு / உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்